

ஈரோடு மாவட்டம் நம்பியூர் வட்டத்திற்குட்பட்ட கூடக்கரை, எலந்தூர், செட்டிபாளையம் ஆகிய பகுதிகளில் கீழ்பவானி பாசன திட்டத்தின் கீழ் வாய்க்கால் பகுதிகளில் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். நிகழ்வில் ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, கண்காணிப்பு பொறியாளர் எஸ்.மன்மதன், கீழ்பவானி வடிநில கோட்ட செயற்பொறியாளர் அருள் அழகன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் பலர் உள்ளனர்.




விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் மழுவந்தாங்கல் ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டிடத்தினைசிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் மற்றும் பலர் உள்ளனர் .

முத்தமிழறிஞர் கலைஞர் 5ஆம் ஆண்டு நினைவு நாள்!

# சேலம் மத்திய மாவட்டத்தில் கலைஞர் திருவுருவச் சிலைக்கு மரியாதை!

## மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. அறிக்கை!

சேலம், ஆக. 6-

தலைவர் கலைஞர் அவர்களின் 5ஆம் ஆண்டு நினைவு நாள் தமிழினத்தலைவர், முத்தமிழறிஞர், உலக தமிழர்களின் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் தலைவர் கலைஞர் அவர்களின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாள் நாளை (ஆகஸ்டு 7ஆம் தேதி திங்கட்கிழமை) தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா வழிநின்று கழகம் வளர்த்து, ஒட்டு மொத்த தமிழ் சமுதாயத்தையும் தலைநிமிரச் செய்த தலைவரின் நினைவுநாள் ஆகஸ்டு 7. தமிழ் சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்ட, மிக பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட, பழங்குடியினர், சிறுபான்மையினர் என



அனைவரின் உணர்வுகளை மதித்து அனைத்துத் தரப்பினருக்கும் பல உரிமைகளை பெற்றுத்தந்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

தந்தை பெரியாரின் கொள்கைகளையும், பேரறிஞர் அண்ணாவின் லட்சியங்களையும் உயிர் மூச்சாக கொண்டு கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் இனம், தமிழ் மொழி காக்கும் பொறுப்பினை தன் தோளிலே சுமந்து தமிழ் மொழி காத்து, வெற்றி நடைபோட்டவர் தலைவர் கலைஞர் அவர்கள். 1969ஆம் ஆண்டு ஆட்சி பொறுப்பேற்றது முதல் தமிழ்ச் சமுதாய மக்களின் நலன் காக்கும் எண்ணிலடங்கா திட்டங்கள், தமிழ் மக்களின் உரிமைகளை பாதுகாத்தல், சமூக நீதி, மத நல்லிணக்கம், ஒடுக்கப்பட்டோர் உரிமையினை பாதுகாத்தல் என தொடர்ந்து உழைத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். ஏழை, எளியவர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், மகளிர், நெசவாளர்கள், வணிகர்கள், அரசு ஊழியர்கள், மாணவர்கள், இளைஞர்கள், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள் என அனைத்து தரப்பினரின் நல்வாழ்வுக்காக "கண்துஞ்சாமல் தொடர்ந்து உழைத்த தூய தலைவர்" நம் தலைவர் கலைஞர் அவர்கள்.

தந்தை பெரியாருக்கு பிறகு, பேரறிஞர் அண்ணாவிற்கு பிறகு தலைவர் கலைஞர் இல்லாமல் இருந்திருந்தால் இந்த தமிழ்ச் சமுதாயம் நாதியற்று போய் இருக்கும். தலைவர் கலைஞர் அவர்களால் தான் தமிழினம் தலை நிமிர்ந்தது. இன்று நம் உயிர் நிகர் தலைவர் தமிழக முதல்வர் தலைவர் தளபதி அவர்கள், தலைவர் கலைஞர் வழியில் உலகம் போற்றும் நல்லாட்சியை தந்து கொண்டிருக்கிறார்கள்.

தலைவர் கலைஞரின் நினைவை போற்றும் வகையில் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் உள்ள தந்தை பெரியார் சிலையிலிருந்து நாளை (ஆகஸ்டு 7ம் நாள்) திங்கட்கிழமை காலை 08.00 மணிக்கு அமைதி ஊர்வலம் புறப்பட்டு பெரியார் மேம்பாலம் வழியாக அண்ணா பூங்கா அருகில் அமைந்துள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி அஞ்சலி செலுத்தப்படுகிறது.

மேலும் சேலம் மத்திய மாவட்டத்தில் உள்ள சேலம் மாநகரத்தின் அனைத்து கோட்டங்களிலும் உள்ள அனைத்து தெருக்களிலும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தை வைத்து மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்திட வேண்டும். இதைப் போலவே பேரூரில் உள்ள அனைத்து வார்டுகளிலும் மற்றும் ஒன்றியங்களில் உள்ள அனைத்து கிளைக் கழகங்கள் தோறும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்தினை வைத்து அவரது நினைவை போற்றும் வகையில் ஏழை எளியவர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கி மரியாதை செலுத்திட வேண்டும்.

இந்த நிகழ்ச்சிகளில் மாவட்ட கழக, மாநகர கழக நிர்வாகிகள், பொதுக் குழு செயற்குழு உறுப்பினர்கள், ஒன்றிய கழக, பகுதி கழக, பேரூர் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், மாவட்ட கழக பிரதிநிதிகள், மாநகர கோட்டக் கழக செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இளைஞர் அணி, வழக்கறிஞர் அணி, மாணவர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, வர்த்தகர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் அணி, நெசவாளர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதி திராவிடர் நலக் குழு ஆகிய சார்பு அணிகள் உள்ளிட்ட அனைத்து அணிகளைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய, பகுதி, பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தலைவர் கலைஞர் அவர்கள் மீது பற்று கொண்ட பொது மக்கள் என அனைவரும் பங்கேற்று சிறப்பித்திட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



சேலம் மத்திய மாவட்டம் ஓமலூரில் 135 குக்கிராமங்களுக்கு 11 நடமாடும் நியாயவிலைக்கடை வாகனத்தை சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர். இரா. இராஜேந்திரன் தொடங்கிவைத்து ரேஷன் பொருட்களை வழங்கினார். உடன் தெற்கு ஒன்றிய செயலாளர் ஏ. சி. எம். செல்வகுமரன். மாவட்ட கவுன்சிலர்கள். அழகிரி, சண்முகம், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.குப்புசாமி, கருணாகரன். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர். அருண் பிரசன்னா ஊராட்சி தலைவர்கள். கண்ணன், மனோகரன், பாலு, சக்தி இருந்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆயிரம்விளக்கு எஸ்.ஏ.எம்.உசேன்

### ஆகஸ்ட் 6 (2019)



தனது இளமைக் காலத்திலேயே, கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, தனது குடும்பத்தைப் பற்றிகூட கவலைப்படாமல் ஆயிரம்விளக்கு பகுதி கழகப் பணிகளில் முழுநேரம் ஈடுபட்டு வந்தவர்.

வட்டச் செயலாளர், பகுதிச் செயலாளர், மாவட்டத் துணைச் செயலாளர், துணை அமைப்புச் செயலாளர், கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர், தலைமை நிலையச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்படி இருமுறை கைது செய்யப்பட்டார். மேலும், கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகத்தின் சார்பில் 2013ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் "கலைஞர் விருது" வழங்கப்பட்டது.

"தி.மு.கழகத்தின் கையிலே கிடைத்த ஆயிரம்விளக்கின் அற்புத விளக்கு உசேன்" என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப் பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

முத்தமிழ் அறிஞர் கலைஞர் 5ம் ஆண்டு நினைவு நாள்!

# மயிலாடுதுறை மாவட்டம் முழுவதும் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மரியாதை!

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., வேண்டுகோள்!

நாகை, ஆக. 6-

மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் அரசியல் களத்திலும், சட்ட மன்ற ஜனநாயகத்திலும் மகத்தான சாதனைபடைத்த பன்முக ஆற்றல் தன்னகத்தே பெற்றிருந்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சட்ட மன்ற தேர்தலில் போட்டியிட்ட 13 முறையும் வெற்றியை கண்டு 5 முறை 20 ஆண்டுகள் தமிழக முதல்வராக இருந்த போது அனைவருக்கும் பாதுகாப்பான குடி நீர் வழங்க தமிழகம் முழுவதும் மேல் நிலை நீர் தேக்க தொட்டியை அமைத்தும், கைரிக்ஷாவை



ஒழித்தும், மகளிர் சுய உதவி குழுவை உருவாக்கி, பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இலவச பஸ்பாஸ், கலைஞர் காப்பீடு திட்டம் கொண்டு வந்தும், 108 ஆம்புலன்ஸ் சேவை திட்டம் கொண்டுவந்தது, முதல் பட்டதாரியின் படிப்பு செலவை அரசே ஏற்கும் திட்டம், கர்ப்பிணி பெண்களுக்கு உதவித் தொகை என எண்ணற்ற திட்டங்களை கொண்டு வந்த தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு வித்திட்ட முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் 50 ஆண்டுகளுக்கு மேலாக தி.மு.க. தலைவர், 80 ஆண்டு பொதுவாழ்க்கை, 70 ஆண்டு திரைத்துறை என கலை, இலக்கியம், எழுத்து என தான் தொட்ட துறை அனைத்திலும் கலைஞருக்கு நிகர் கலைஞர் என்று வாழ்ந்து பல பிரதமர்கள், ஜனாதிபதிகளை உருவாக்கிய மாபெரும் தலைவர் கலைஞர் அவர்களின் 5 ம் ஆண்டு நினைவு நாளான வரும் 7ம் தேதி மயிலாடுதுறை மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர் அமைதி ஊர்வலம் நடத்தி கலைஞர் திருஉருவபடம் வைத்து மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்திட வேண்டுகிறேன். மேலும் அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் பகுதியில் உள்ள கிளைகள், வார்டுகள் தோறும் கலைஞர் திருஉருவப் படத்தை வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்த வேண்டும். இதற்கான ஏற்பாடுகளை ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் செய்திட வேண்டும். இந்நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., கூறியுள்ளார்.

சேலம் கிழக்கு மாவட்டத்தில் - 5ஆம் ஆண்டு நினைவு நாளில்

# முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மரியாதை!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் வேண்டுகோள்!

சேலம், ஆக. 6-

சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் உலகத்தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு நாளில் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படங்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திட வேண்டும் என சேலம் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது வேண்டுகோள் வருமாறு:-

மறைந்தும் மறையாமல் நம்முடைய நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 5ம் ஆண்டு நினைவு நாளையொட்டி நாளை (7.8.2023 - திங்கள்கிழமை) காலை 9 மணியளவில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு எனது தலைமையில் வாழப்பாடியில் உள்ள மாவட்ட அலுவலகத்தில் அமைதி பேரணி சென்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது. அதுசமயம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 80 ஆண்டு கால பொது வாழ்வு, 60 ஆண்டுகால மக்கள் பிரதிநிதி, 50 ஆண்டுகால கட்சித் தலைமை, 20 ஆண்டுகால முதல்வர், 94 ஆண்டு காலமாக உழைப்பு, இயல் இசை நாடகம் போன்ற ஈடுசெய்ய முடியாத மிக்க தலைவராக திகழ்ந்தவர். ஜனநாயகம், சமூகநீதி, சமத்துவம் ,சகோதரத்துவம், மதச்சார்பின்மை, உள்ளிட்ட அனைத்து முற்போக்கு லட்சியங்களுக்காகவும் தனது வாழ்நாள் முழுவதும் வாதாடி போராடி ஆட்சியிலிருந்த நேரங்களில் உன்னத நோக்கங்களை நிலைநாட்டிய தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் நம்மை விட்டு பிரிந்தாலும் அவர் மீது கொண்ட கொள்கையாலும் சரித்திர சாதனைகளாலும் கலாச்சார நினைவுகளோடு நம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கி



றார். ஏழை எளிய பொது மக்களுக்கும் ஆதரவற்றோர் முதியோர்களுக்கும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் மாவட்ட,நகர ,ஒன்றிய , பேரூர், கழக செயலாளர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வார்டு செயலாளர்கள், மற்றும் கிளை கழக செயலாளர்கள் ,அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் ,துணை அமைப்பாளர்கள் ,சார்பு அணிகள் செய்திட வேண்டும் அவரவர் பகுதிகளில் வீட்டு முன்பு முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திட வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## கா.அண்ணாதுரை அறிவிப்பு



தஞ்சை தெற்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம் இன்று (6.8.2023-ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணியளவில் தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் சுப.சேகர் தலைமையில் நடைபெறும் செயற்குழுக் கூட்டத்திற்கு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணி மாவட்ட அமைப்பாளர்கள், மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுகிறேன்.

பொருள்: 1. முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 5ஆம் ஆண்டு நினைவு நாள்.

2. ஆகஸ்ட் 27 அன்று நமது மாவட்டத்திற்கு வருகை தரும் விளையாட்டு துறை அமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள் - பொற்கிழி வழங்குதல்.

3. இராமநாதபுரத்தில் நடைபெறும் மீனவர் மாநாடு.

4. கழக ஆக்கப் பணிகள்.

**கா.அண்ணாதுரை**
செயலாளர்
தஞ்சை தெற்கு மாவட்ட தி.மு.க.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து, கால்களை இழந்த 10 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.8.50 இலட்சம் மதிப்பீட்டில் இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட புதிய பெட்ரோல் ஸ்கூட்டர்களை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிருஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் வழங்கினார். இதில் மாநகராட்சி மேயர், வடக்கு மாநகர கழக செயலாளர் ந.தினேஷ்குமார், வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ், மாவட்டக் கழக துணை செயலாளர் வழக்கறிஞர் சி.கே.நந்தினி, பகுதி கழக செயலாளர்கள் மியாமி ஆ.அய்யப்பன், மு.க.உசேன், வட்டக் கழக செயலாளர்கள் மு.நந்தகோபால், ஆதவன் முருகேசன், மாநகர அவைத்தலைவர் க.ஈஸ்வரமூர்த்தி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ம.சூர்யா, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் துரை.ரவிச்சந்திரன் உள்பட மாவட்ட மாற்றுத்திறனாளி அலுவலர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.